பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 02 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா - ஐரோப்பா இடையேயான நல்லுறவுகளில் இந்த ஆண்டு திருப்புமுனை ஏற்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் மக்கள் நலனில் அக்கறை இல்லாத ஜீரோ பட்ஜெட் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தில் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் 33 சதவீதம் மின்சார பேருந்துகள் இயக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** வரும் கல்வியாண்டுக்கான JEE முதன்மை தேர்வில் 12 மாணவர்கள் முழு மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

**5.** உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பா இடையேயான நல்லுறவுகளில் இந்த ஆண்டு ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் உடனான தமது சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால், ஃபிரான்ஸ் உடன் முன் எப்போதும் இல்லாத வகையில் உறவு மேம்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அந்நாட்டுடன் இரட்டை வரிவிதிப்பை தவிர்ப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு இருப்பதையும் பிரதமர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் இரு நாட்டு மக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் இடையேயான முதலீடுகள் அதிகரிக்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஃபிரான்ஸ் அதிபருடன் மும்பையில் தாம் நடத்திய பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகளை

அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, பசுமை எரிச்சக்தி, விண்வெளி மற்றும் புதுமைத் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து ஃபிரான்ஸ் அதிபருடன் விரிவான ஆலோசனை நடத்தியதாகவும் திரு. நரேந்திர மோடி அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஃபிரான்சில் இந்த ஆண்டு நடைபெற உள்ள ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்க வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஃபிரான்சின் **Evian** நகரில் நடைபெற உள்ள உச்சிமாநாட்டில் எடுக்கப்பட உள்ள முடிவுகள் தொடர்பான ஒப்பந்தக் கூட்டத்தில பங்கேற்க வருமாறு ஃபிரான்ஸ் அதிபர் அழைப்பு விடுத்ததாக அந்நாட்டு அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த ஆண்டு ஃபிரான்ஸ் தலைமையில் ஜி-7 உச்சிமாநாடு நடைபெற உள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, கனடா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவர்கள் இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

<<<<>>>>

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் மக்கள் நலனில் அக்கறை இல்லாத ஜீரோ பட்ஜெட் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

சென்னை அம்பத்தூரில் பிஜேபி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழக மக்களை ஏமாற்றும் வகையிலும், அவர்களை இருண்ட நிலைக்கு கொண்டு செல்லும் வகையிலும் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மொத்தத்தில் ஜீரோ மதிப்பெண்தான் தர வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் விமர்சித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் 33 சதவீதம் மின்சார பேருந்துகள் இயக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு காலநிலை உச்சிமாநாடு **4.0** நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், தற்போது சென்னையில் **380** மின் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாகவும், மாநிலம் முழுவதும் எதிர்காலத்தில் இத்தகைய பேருந்துகளை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த மாநாட்டை தொடர்ந்து மாநில அரசு சிறப்பான முறையில் நடத்தி வருவதாக கூறினார்.

அதிகரிக்கும் வெப்பநிலை, அதிக மழைபொழிவு, புயல், வறட்சி போன்றவை மிகப்பெரும் பிரச்சினைகளாக உருவெடுத்திருப்பதாகவும், காலநிலை மாற்றம் என்பது அன்றாடம் நடக்கும் பிரச்சினை என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் கார்பன் உமிழ்வை குறைக்கும் நடவடிக்கையாக வரும் **2030**ஆம் ஆண்டுக்குள் அரசின் பங்களிப்பை அதிகரித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

வரும் கல்வியாண்டில் இந்திய தொழில்நுட்ப கழகம் மற்றும் மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கான **JEE**

முதன்மை தேர்வில் 12 மாணவர்கள் முழு மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 21ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த தேர்வை 13 லட்சத்து 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதினர்.

நேற்று தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் ஆந்திராவைச் சேர்ந்த 2 பேர், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த 3 பேர் உட்பட 12 பேர் முழு மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த அஜய் என்ற மாணவன் 99 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீதம் பெற்று தேசிய அளவில் 15வது இடம்பிடித்துள்ளார்.

புதுச்சேரி மாணவன் கார்த்திகேயன் 99 புள்ளி ஒன்பது ஆறு சதவீதத்துடன் 25வது இடத்தைப் பிடித்துள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பக பகுதியில் தீ தடுப்புக் கோடுகள் அமைக்கும் பணியில் வேட்டைத்தடுப்புக் காவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கோடைகாலம் தொடங்குவதற்கு முன்னதாக இந்தப் பணிகள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Sound Byte - Saravanan - 40 Sec)**

<<<<>>>>

தருமபுரியில் பெண்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இதில் **381** பெண்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Dhandapani - 41 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி விவகாரம் தொடர்பான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ஈரான் அமைச்சர் திரு. அப்பாக் அராக்சி தெரிவித்துள்ளார்.

------------

பெரு நாட்டில் இடைக்கால அதிபர் திரு. **Jos Jerry** மீதான ஊழல் குற்றச்சாட்டைத் தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பதவிநீக்கம் செய்வதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

------------

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் பாதுகாப்பு படையினரின் சோதனைச்சாவடியைக் குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத்த தாக்குதலில் 11 வீரர்கள் உட்பட 12 பேர் உயிரிந்தனர்.

------------

பங்களாதேஷ் பிரதமராக பதவியேற்றுள்ள திரு. தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியா வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அருகிலிருந்து கோவில் வளாகத்தின் வள்ளிக் குகை வரை அமைக்கப்பட உள்ள புதிய புறவழிச் சாலை இடத்தை மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் ஆய்வு செய்தார்.

------------

தேச ஒற்றுமையை வலியுறுத்தியும், கடலோர பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு, நீர்நிலைகளை பாதுகாப்பது குறித்து மத்திய

தொழிற் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ள சைக்கிள் பேரணி பட்டுக்கோட்டை வந்தடைந்தது.

------------

தேனி மாவட்டத்தில் ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு மின் பலகை பொருத்தும் தொழில்நுட்ப வல்லுநர் பயிற்சிக்கு தாட்கோ இணையதளத்தில் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் தெரிவித்துள்ளார்.

------------

சிவகாசியில் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணியை ஆட்சியர் திரு சுகபுத்ரா நேற்று தொடங்கி வைத்தார்.

------------

திருவண்ணாமலையில் ஈர நிலங்கள் கள ஆய்வு சரிபார்ப்பு பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் தொடங்கி வைத்தார்.

------------

ஈரோடு மாவட்டம் காளிதிம்பம் மலை கிராமத்திற்கு முதல் முறையாக இயக்கப்பட்ட அரசு பேருந்தை மலை கிராம மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

இந்த தொடரின் ஏ பிரிவில் இதுவரை நடைபெற்ற 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா சூப்பர்-8 சுற்றுக்கு ஏற்கனவே முன்னேறியுள்ளது.

முன்னதாக நேற்று பி பிரிவில் இடம்பெற்றுள்ள ஜிம்பாப்வே - அயர்லாந்து அணிகளுக்கு இடையே இலங்கையின் பல்லேகலே-வில் நடைபெற இருந்த ஆட்டம் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி அளிக்கப்பட்டது.

புள்ளிகள் அடிப்படையில் சூப்பர்-8 சுற்றுக்கு ஜிம்பாப்வே முன்னேறியதால் இந்தப் பிரிவில் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை ஆஸ்திரேலியா இழந்தது.

-------------

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் நேபாளத்தை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**<<<<The End>>>>**